**ராஜாங்கனய பிரதேச சபையி - 2022**

**------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ராஜாங்கனய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்தஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில்உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் ராஜாங்கனய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்தஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் நிலுவை டென்டர் குத்தகை வாடகை ரூபா.15,183 நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய டென்டர் பிணை வைப்புக்களிலிருந்து பதிலிடும் போது அப் பெறுமதியை செலுத்த வேண்டிய டென்டர் பிணைக் வைப்புக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியததிற்கு வரவு வைக்கப்பட்டு இருந்தது. | ஏற்றுக்கொள்வதாக. | சரயான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டிற்குரிய மோடார் கிரேடர் வாடகை வருமானம் மற்றும் JCB வாடகை நிலுவை வருமானப் பெறுவனவு ரூபா.511,350 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் சொத்துக்கள் விற்பனையால் ரூபா.351,000 பணமாக கிடைத்திருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளினால் கிடைத்த காசுப் பாய்ச்சலினுள் சொத்து விற்பனையால் கிடைத்த இலாபம் ரூபா.74,000 தொகை மற்றும் நட்டம் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.94,700 தொகையாக குறிப்பிட்டிருந்த காரணத்தால் முதலீட்டு செயற்பாடுகளினால் கிடைத்த காசுப் பாய்ச்சல் ரூபா.371,700 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டில் அகற்றிய ஜெனரேட்டரிற்குரிய திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா.73,200 ஆன போதும் சொத்து விற்பனை இலாபத்தை கணக்கிடும் போது அது ரூபா.24,000 ஆக செம்மையாக்கி இருந்ததால் விரிவான வருமானக் கூற்றில் ஜெனரேட்டர் விற்பனை இலாபம் ரூபா.49,200 குறைத்து இனங்காணப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டில் அகற்றிய ஜெனரேட்டர் மற்றும் நீர் பவுசரிற்குரிய பெறுமானத் தேய்வு முறையே ரூபா.19,200 மற்றும் ரூபா.21,870 குறைத்து கணக்கிட்டதால் பெறுமானத் தேய்வு ரூபா.41,070 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டில் அகற்றிய நீர் பவுசரிற்குரிய திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா.73,170 ஆன போதும் சொத்துக் விற்பனை இலாபத்தை கணக்கிடும் போது அதனை ரூபா.24,300 ஆக குறைத்து சீராக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா.2,442,797 ஆன 03 கணக்கு விடயங்களிற்குரிய போதிய கணக்காய்வு சான்றுகள் சமர்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரசோதிக்க முடியவில்லை. | ஏற்றுக்கொள்வதாக. | உறுதிப்படுத்தல் சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த் செலவு ரூபா.8,712,211 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த் செலவு ரூபா.12,036,604 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 1,360,500 | 1,534,240 | 973,440 | 44,400 | 1,014,700 | 1,617,910 | 1,170,710 | 497,600 |
| (ii) | வாடகை | 11,802,082 | 10,058,192 | 9,588,502 | 5,285,163 | 8,919,882 | 8,793,831 | 4,316,508 | 4,815,473 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 318,000 | 423,530 | 335,530 | 226,425 | 397,975 | 520,755 | 284,180 | 356,425 |
| (iv) | ஏனைய வருமானம் | 19,163,175 | 7,502,844 | 7,130,990 | 7,369,404 | 31,105,544 | 5,675,559 | 6,929,288 | 6,997,550 |
| | | 32,643,757 | 19,518,806 | 18,028,462 | 12,925,392 | 41,438,101 | 16,608,055 | 12,700,686 | 12,667,048 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| (i) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் 134 (i) பிரவு பிரகாரம் சபை அதிகார எல்லையின் அபிவிருத்தி செய்த பிரதேசங்களில் அமைந்துள்ள அசையாத சொத்துதொன்று அல்லது அசையாத சொத்து வகையொன்றின் வருடாந்த பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிட வேண்டிய போதும் புதிய பிரதேசங்களை இனங்கண்டு சட்ட ஆலோசனை பிரகாரம் வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக. | வீதவரி அறவிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) மீயாய்வாண்டு திசெம்பர் 31 தகிதயன்று நிலுவை வேலை வரி ரூபா.15,000 வியாபார வரி ரூபா.29,400 வியாபார அனுமதிக் கட்டணம் ரூபா.226,425 மற்றும் நிலுவை நீர் கட்டணம் ரூபா.877,710 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவை வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) **வாடகை**

| | | |
|---|---|---|
| (i) 2022 ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் ரூபா.504,956 ஆன இயந்திர வாடகை வருமானத்தை அறவிட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைத் தொகையை அறவிட வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை கடையறை வாடகை ரூபா.4,780,213 ஆனது. | ஏற்றுக்கொள்வதாக. | - மேற்படி - |

(இ) **ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியன்று நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.3,355,922 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.808,500 தொகையை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா.1,356,169 தொகை மாத்திரம் கிடைக்க வேண்டி உள்ளதாக. | நிலுவை தொகையை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்றாட்டு மீளாய்வு**

**விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான செயலாளர் அலுவலகத்தினால் பிரதேச சபையின் பாவனைக்கு 1993 ஆண்டு முதல் வழங்கியுள்ள கெப் வண்டியை திருத்த முடியாது ஓட்டத்திலிருந்து அகற்றி விளைவற்று காணப்பட்டது. | பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கிறேன். | விரைவில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |